**<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி</u>**
**<u>OS.127/2023</u>**

<u>நாள்.19.02.2026</u>

**<u>பி.வா.சா.2. வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

வழக்கு சம்பந்தப்பட்ட நபர்களை தெரியும். எப்படி தெரியும் என்றால் பிரதிவாதி எனது கடைக்கு வாடிக்கையாளர் ஆவார். நான் மளிகைக்கடையில் வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட ஆவணங்களில் கையெழுத்து ஏதேனும் போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். அந்த ஆவணத்தின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணத்தில் எந்த தேதியில் கையெழுத்து போட்டேன் என்றால் 09.09.2021–ல். எங்கு வைத்து கையெழுத்து போட்டேன் என்றால் சார்பதிவாளர் முன்னிலையில் கையெழுத்து போட்டேன். நான் கையெழுத்து போட்டுள்ள ஆவணம் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். நான் சார்பதிவாளர் அலுவலகம் சென்று ஆவணத்தில் கையெழுத்து போட்டு விட்டு சென்றுவிட்டேன் என்றால் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன்.

**மறுவிசாரணை :– இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.